## புறநானூற்றில் போரிலக்கியச் சிந்தனை – ஓர் ஆய்வு



**ப.ராகவி.,**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்**
**பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, விளார் பைபாஸ், தஞ்சாவூர் - 613006.**

**முன்னுரை:**

பழங்காலத்திற்கு அடுத்த இடைக்காலத்தில் பக்தி இலக்கியங்கள் தமிழைப் பார் வியக்கப் போற்றி வளர்த்தன. சங்ககாலம் முதல் தற்காலம் வரை இத்தமிழ் மண்ணில் நின்று நிலவும் இலக்கியங்கள் பல. அவற்றுள் கருத்துச்செறிவும், கற்பனை வளமும் பெற்றுத் திகழ்வது சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு. இலக்கியத்தைக் கற்பவர்களால் மட்டுமே சமுதாய அக்கறையுடன் சிந்திக்கவும், மனத்திட்பத்தோடு செயலாற்றவும் முடியும் என்பதனை உணர்த்தும் வகையில் புறநானூற்றுப் புலவர்கள் கூட எந்த அளவுக்கு வீரமிகுந்த சிந்தனையும், எழுச்சியும் இருந்தால் போர் வீரர்கள் வியக்கத்தக்க வகையில் போர் புரிகின்றனர் என்பதை தம் பாடல் வரிகள் மூலம் நமக்குக் கொடுத்துள்ளனர் என்பது சிந்திக்கற்பாலது. பழந்தமிழக மக்கள் வாழ்ந்த கொடை, சிறப்பு, பண்பாடு, திருமணச்சடங்கு முறை, மூடநம்பிக்கை போர் முதலியவைகள் பெற்றுத் திகழ்ந்தது மட்டுமல்லாமல் வீரத்தோடும் பெண்கள் எவ்வாறு பாலுடன் பண்பையும், வீரத்தையும், விவேகத்தையும், கடமை உணர்வையும் ஊட்டி வளர்த்த சிறப்பினை வெளிப்படுத்தும் விதத்தை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

**பாடப்பெற்ற புரவலர்கள் தொகை:**

புறநானூற்றில் பாடப்பெற்ற புரவலர்கள் உதயஞ்சேரலாதன் முதல் சோழன் நலங்கிள்ளி வரையாக உள்ள நூற்று முப்பத்தினான்கு பேர் ஆவார். இந்நூலில் அதிகம் பாடிய புலவர்களாக நாற்பத்தொன்பது புலவர்களும், அவர்கள் பாடிய பாடல்களாக இருநூற்று எழுபத்தைந்து பாடல்களும் காணப்படுகின்றன.

**உரைச்சிறப்பு:**

புறநானூற்றின் பழைய உரையில் பதப்பொருளை நன்றாக விளக்கி, உரிய இடங்களில் சொற்களை முடித்துக்காட்டி இலக்கணக் குறிப்பையும், திணை துறைகளையும், பழமொழிகளையும், அணிகளையும், சொல்நயம், பொருள் நயங்களையும் புலப்படுத்துகின்றது.

**வீரமும் போரும்:**

தலைமை பூண்ட மன்னரும் போர்த் தொழிற்குரிய மறவரும் இவரன்றிப் பெண்டிரும் வீரப்பண்பை ஏனைய பண்புகள் யாவற்றிலும் தலைச்சிறந்ததாகக் கருதும் நிலையைப் புறநானூறு காட்டுகிறது. ‘வாடுக விரைக நின் கண்ணி யொன்னர், நாடு சுடு கமழ்புகை யெறிந்த லொனே’ என மாற்றார் நாட்டைத் தீ மடுத்த புகழ் பாடுவர். புகழுக்கு மாறாக இகழ்ச்சி வருகின்ற நிலையை பாண்டிய வேந்தர்கள் மானக்கேடாகக் கருதி போர் புரிந்துள்ளனர். தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன்னைப் பகைவேநதர் இறையன் எனக் கூறிப் பழித்தமை பொறாது வஞ்சின முரைத்துப் போர் புரிந்ததாகக் கூறப்படுகிறது. எல்லோரோடும் ஒப்ப நில்லாது போரெல்லையாக நிற்கும் பெருமித உணர்வே வீரமென்றும், இவ்வுணர்வு கல்வி, தருகண், இசைமை, கொடை ஆகிய நாற்பண்பு பற்றி பிறக்குமென்றும் கூறுவர். போர்குணம் மிக்க ஆடவரை வீரர்,



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மறவர், மள்ளர், பொருநர், மழவர் எனப் பல சொற்களில் குறிப்பதன்றியும், புலி, சி;ங்கம், சிறுத்தை ஆகியவற்றோடும் வெள்ளம், தீ, ஆகியவற்றோடும் உவமித்தும் உருவகித்தும் புலவர்கள் பாடியுள்ளனர்.

**போர் அறங்கள்:**

பண்டைத் தமிழர் போர் மேற்கொள்ளினும் அதனையும் அறவழியிலேயே நிகழ்த்தினர். போர்க்களத்தில் பகைவரோடு போரிடும்போது அறநெறிகளையே பின்பற்றினர். பண்டைத் தமிழகத்தில் நிகழ்ந்த போர்களை வெம்போர் என்றும், நற்போர் என்றும் வசையில் வெம்போர் என்றும், அறத்தின் மண்டிய மறப்போர் என்றும் இலக்கியங்கள் போற்றுகின்றன. 'நற்போர்' என்பதற்கு அறத்தாற் பொருகின்ற போர் என்று நச்சினார்க்கினியர் கூறும் உரையும் இக்கருத்திற்கு அரண் செய்கிறது. போர் தொடங்குவதற்கு முன்னால் போர் செய்யப் போவதை வெளிப்படையாக முரசறைந்து பகைவர்க்குத் தெரிவித்தல் மரபாக இருந்தது.

**வீரயுகம்:**

மனித இனம் வாழ்ந்த காலங்களில் வீரயுகக் காலமே பொற்காலம். உலக மொழிகளில் இப்பண்பு கொண்ட பாடல்கள் முதலில் தோன்றியுள்ளன. தம் மன்னனுக்காக போரில் வீரதிரம் புரிந்து வெற்றித் தேடித் தந்த மாவீரர்கள் வாழ்ந்த காலம் வீரயுகக் காலம், அக்காலமே பின்வந்த மரபினராலும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளது. இவ்வீரர்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகக் கருதி வழிப்பட்டனர். வீரம் என்ற சொல்லுக்கு அரிய ஆற்றல் என்பது பொருள், அதாவது அஞ்சத்தக்கன கண்டவிடத்தும் அஞ்சாத வீர உணர்வைக் குறிக்கும். இது ஒரு வடசொல் வீர்ய என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். அவ்வீரத்தை தமிழ்ச் சான்றோர் மறம் என்ற சொல்லிற்குப் பாவம் என்று பொருள் கூறி களங்கப்படுத்தினர் பின் மறம் என்ற சொல் வழக்கொழிய வீரம் அந்த இடத்தைப் பிடித்தது.

இச்சொல்லின் வளர்ச்சியாக வாயவ, படைஞர், மறவர், மன்னர், தானையர், சான்றோர் போன்ற பல்வேறு சொற்கள் வழங்கப்பட்டுள்ளன. 'மறத்தகை மைந்தரோடு ஆண்டுப்பட்டனவே தேர்தர வந்த சான்றோர் எல்லாம்' என வீரம் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. பண்டைத் தமிழ் மக்கள் வீரனையே பெரிதும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். காரணம் தன்னைக் காக்கவும், தன்னைச் சேர்ந்தாரைக் காக்கவும் வலிமை அவசியம். எனவே ஒரு மன்னன் தன் குடிகளைக் காக்கத் தன் வீரத்தை நிலைநாட்ட போர் செய்வதை இவ்வுலகத்து இயல்பாகக் கொண்டனர். எனவே போரிடுவது இவ்வுலகத்து இயல்பாகவே இருந்தது. எனினும் புறநானூறு மூன்று காரணங்களைக் கூறுகிறது. அவை மண்ணாசை, பெண்ணாசை, ஆதிக்க வெறி என்பன. இந்நூலிடத்துப் போர்கள் பல குறிப்பிடப் பட்டிருப்பினும் சிறப்பானவை வெண்ணிப் பறந்தலைப் போரும், தலையாலங்கானத்துப் போரும் ஆகும். மண்ணாசையால் அரசன் போர் செய்ததை, 'இடம் சிறிது என்னும் ஊக்கந் துரப்ப' என்ற கபிலரின் பாடல் உணர்த்தும்.

**போரிலே சாவதே புகழ் மரணம்:**

எதிர்த்தள் எல்லாம் வீழ், நீ விழுப்புண் பெற்று விட்டாய்! இனி வெல்லுவதற்குப் போரெங்கே இருக்கிறது என்கிறது பாடல். இப்பாடல் பாடியப் புலவர் ஔவையார். வாரால் இறுக்கிக் கட்டப்பட்ட போர் முரசும் எழுப்புகின்ற ஒலிக்கேட்டுச் சென்று, போர் வெல்லுதல் இனியேது? நின்னோடு போரிட வந்தவர்கள் நின் கொடிப்படைக்கு ஆற்றாது சிதறியழிந்தனர். போரிலே ஈடுபட்டு வீர மரணம் விழுப்புண் பெறாமல் கிடப்பவர் உடலை, அவர் உயிராசை நீங்கத் தடுப்பையிலே கிடத்தி போரிலே ஈடுபட்டு வீர மரணம்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

அடைந்த மேலோர் போரும் புகழுலகம் சென்றசையட்டும் என்று, வாளால் வெட்டிப் பின் அடக்கம் செய்கின்ற இழிவிலிருந்து அவர்கள் தப்பினர்.

**போரில் புலவரின் வீரவாழ்வு:**

போரில் புலவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. போர் நெறியை வரையறுத்துக் காட்டியவர் புலவர் பெருமக்களாவர். அப்போர் நெறிகளை மீறியவர்களை அறிவுரை கூறி அறவழியில் செல்ல வலியுறுத்தியவரும் புலவர்களே. வேந்தர், குறுநில மன்னர், வீரர் ஆகியோரின் பேராற்றலையும் அவர்கள் மேற்கொண்ட போர் அறங்களையும், வெற்றிச் சிறப்பையும் போற்றிப் பாடியவரும் புலவர்களே. அறநெறியில் போருடற்றியோரையே அவர்கள் புகழ்ந்து போற்றினர். போர் வேட்கை கொள்ளுமாறும் அதனால் பொருள் பெருமாறும் முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் தூண்டுகிறார்.

வாழ்வி;ல் வீரம்:

மனித வாழ்வில் வீரத்திற்கு முதன்மையுண்டு. தமிழ் மக்களின் வீர வாழ்விற்குச் சான்றாகத் திகழ்வது புறநானூறு, பதிற்றுப்பத்துப் போன்ற புற இலக்கிய நூல்களாகும். இப்புற இலக்கியங்களை வரலாற்றுச் சான்றுகளாகக் கொண்டு பேராசிரியர் டாக்டர்.கைலாசபதி வீரநிலைக் காலம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார். விலங்குகளோடு போட்டியிட்டு வாழ்ந்த மனிதனுக்கு வீரம் இயல்பிலேயே தேவை ஆயிற்று. இதனால் காட்டையும், மலையையும் சார்ந்து வாழ்ந்தவர் பிற்காலத்தில் மறவர், பொதுவர், வீரர் என்றப் பொதுப்பெயர்களால் குறிக்கப்பெற்றனர். வீரம்-வீரக்குடி என்பன தமிழகத்தில் தனிச் சிறப்பாகும். போர்க்களத்தில் வீரம் விளைவித்த தனிச்சிறப்பினர் எனினும் 'வினையே ஆடவர்க்குயிர்' என்பது பண்டைத்தமிழ்ச் சமுதாயத்தின் கொள்கையாக இருந்தது. வீரம் தமிழர்கள் உயிரைச் துச்சமென மதித்த வீரப்பண்பினர் ஆவர். 'புகழெனின் உயிரும் கொடுக்குவர்' என்ற புறநானூற்றுத் தொடரும் சான்றுகளாகும்.

**போர் குணம்:**

அரசன் என்றாலே முன்னிற்பது அவனது படை அல்லது வலிமை. எனவேதான், வள்ளுவம் முதற்கண் படையைக் குறிப்பிடுகிறார். உடலுக்கு உயிர்போல மன்னனுக்கு வீரமே முக்கியம். படை பலம் இருந்தாலும் வீரம் செறிந்த அரசன் இல்லையெனில் பயனில்லை. அஞ்சாநெஞ்சமும், நினைத்ததை முடிக்கும் திறம் உள்ளவர்களாகவும் மன்னர்கள் விளங்கினர். ஔவையார் அதியமான் வீரத்தைப் பாராட்டும் போது, புலி சீறி நின்றால் அதனை எதிர்த்து நிற்கும் இருளில்லை. வலிமையும் முயற்சியும் உடைய காளைகள் அதிகப் பொருள் கொண்ட வண்டியை இழுத்துச் சென்றாலும் அவை செல்லுவதற்குரிய வழியில்லை. அவை போன்று வீரம் செறிந்த நீ போர்க்களம் புகுந்தால் எதிர்த்து ஆர்க்கும் வீரமும் இல்லை என்கிறார். நல்ல நாடும் நல்ல அரசனும் நிறைபெறப் போர் படை இன்றியமையாதது. ஒரு நாட்டின் படை வலிமையே அந்நாட்டின் நிலை பேற்றுக்கும் அரசின் பெருமைக்கும் அடிப்படையாகும். மன்னரும் போர் விருப்புடையவராகவே விளங்கினர். ஊர் மன்றில் தூங்கும் தண்ணுமையில் காற்றெறிதலால் ஏற்படும் ஒலி கேட்பின் அதனைப் பொர்பறையின் ஒலியென எண்ணி மகிழும் இயல்புடையவன் அதியமான். சோழன் நலங்கிள்ளி போரினால் ஏற்படும் புகழை விரும்பி வெல்லும் போரினைச் செய்யும் பாசறையில் தங்கயிருத்தலையே பெரிதும் விரும்பினான்.

**போரின் தேவையும் போரின் நிலையும்:**

சங்க காலம் வீரத்திற்கு முதன்மையளித்த காலம். போர் என்பது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சி என்றும் உலகத்து இயற்கை என்றும் பண்டைத் தமிழர் கருதினர். உலகில் போர் தவிர்க்க முடியாதது என்ற கருத்தினை அறப்போரைக் காட்டிலும் வேறு சிறப்பு அரசனுக்கில்லை என்று கீதை மொழிகின்றது. மனித இன வாழ்வில் போர் என்பது ஓர் உயிரியல் தேவை. அஃது ஒழுக்கங்களை நெறிநிறுத்தி வகைப்படுத்தும் இன்றியமையாத ஒரு கருவி என்பர் அறிஞர் பெண்கர்த்தி. பண்டைக்காலத்தில் போர் தவிர்க்க இயலாததாகவும் காலத்தின் தேவையாகவும் விளங்கியது. எனவே மூவேந்தர்கள் இடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன.

போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பே பசு, அறவோர், பெண்டிர், பிணியுடையோர், புதல்வரைப் பெறாதோர் முதலானோரைப் பாதுகாப்பான இடம் நோக்கிச் செல்லுமாறு அறிவிப்புக் கொடுக்கும் அறப்போர் முறையும் அன்றிருந்தது. எம் அம்ப கடி விடுதும் நும் அரண் சேர்மின் என அறிவித்த பின்னரே, பகைநாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் பழக்கம் இருந்தது. அறம் செல்லும் வழியில் பண்டைத் தமிழரின் மறமும் செல்வதாயிற்று, வஞ்சினம் கூறிப் போருக்குப் புறப்படும் வழக்கமும் அன்றிருந்தது.

'என்னோடு பொருதும் என்ப அவரை
அரஉர் அலந்த தாங்கித் தேதோடு
அவர்புறம் காணேன் ஆயின், சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக'

என்பது பூதப்பாண்டியனின் புறப்பாடல். பொருதவரும் புல்லரைப் புறம் காண்பேன், இல்லையெனில் என் இனிய துணைவியை விட்டுப் பிரிவேன். என வஞ்சினம் கூறும் வரிவேங்கையின் திறம் கூறும் வண்டமிழ்ப் பாடல்.

**போர் முரசும்:**

சங்க கால மன்னர்கள் போர் நிகழ்த்துவதற்கு முன்னால் சில நெறிமுறைகளைக் கையாண்டனர். இம்முறைப்படியே யாவரும் போர் புரிவர். போர் எழுங்காலத்து தத்தமக்குரிய குலச்சின்னமாகிய பூக்களைச் சூடிக்கொள்வர். சேர வேந்தன் பனையோலையால் அமைந்த பூமாலையை அணிந்திருந்தான் என்பதைப்

'போர்தையம் தோட்டிற் புதைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவர்படலை சூட்ட'

என புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. சோழ மன்னன் ஆத்தி மாலையைச் சூட்டிப் போர் செய்தமையை,

'------------------- ஆநார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட்டோரே'

என்று கூறுகிறது. பாண்டிய மன்னன் வேம்பு மாலையைச் சூடினான் என்பதை, 'மன்ற வேம்பின் எண்குழை மிலைந்து என்று கூறுகிறது.

**போர்க்குரிய காரணங்கள்:**

ஒன்றினையொன்று அடக்கியும் அழித்தும் உயிர் வாழ எண்ணுவது உயிரியல் பண்பு. இது ஒரு வகையில் போர்ப் பண்பேயாகும். 'ஒருவனை யொருவ னடுதலுங் தொலைதலும் புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை' என இடைக்குன்றூர் கிழார் என்னும் புலவர் உர்வின் இயற்கையை அளந்து கூறினார். தான்னொருவனே ஆள

வேண்டும் என்ற முனைப்பே போருக்கான அடிப்படைக் காரணம் எனலாம். சேரமான் கடுங்கோ வாழியதனைப் பாட வந்த கபிலர் இவ்வுண்மையை விளக்குகிறார். வீரம் நிறைந்த எச்சமூகத்திலும் தலைவன் ஒப்பில்லா வலிமையும் ஆற்றலும் உடையவனாகக் கூறப்படுகிறான்.

'களம்புக லோம்புமின் றெவ்வீர் போரெதிர்த்
தெம்முரு முளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே'

என்ற தலைவனின் பேராற்றல் உரைக்கப்பெறும்.

இரவில் போரிடாமை:

பகலில் போரிட்டு இரவில் போரிடாமையைப் பண்டைத் தமிழர் போர் அறமாகக் கொண்டொழுகினர். புலவர் பெருங்குன்றூர் கிழார் படைகளின் இரவக் காலச் செயலினைக் குறிக்கும் பாடல் வழி, பகற்காலப் போரின் கடுமையை உய்த்துணர வைக்கிறது. நெடுநல்வாடை இரவு நேரத்தில் பாசறைகளில் காயமுற்ற வீரர்களுக்கு ஆறுதல் சொல்லும் அரசனின் கடமை உணர்வையும் செயல்களையும் எடுத்தியம்புகிறது.

**புகழார்வம்:**

மன்னர் போர்கள் செய்வதற்குரிய காரணங்களில் ஒன்று புகழார்வமாகும். நிலையில்லாத இவ்வுலகத்தில் நிலைபெற விரும்புவோர் தம் புகழை நிலைநிறுத்த வேண்டும் என்பது சான்றோர் கூற்று. 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே' என்ற புறப்பாடல் வரிகள் மேற்கூற்றை வலியுறுத்துகின்றன. புகழ் எனின் உயிருங்கொடுக்குவர் என்று வரும் தொடர் உயிரைக் கொடுத்தாவது தம் புகழை நிலைநிறுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. அறத்தின் வழிவீரம், வீரத்தின் வழிபோர், போரின் வழி புகழ் இவையே சங்ககால மன்னர், மறவர்களின் இலட்சியமாக விளங்கியமையை சங்ககால இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அரசின் பொருளும் புகழுக்காகவே பயன்பட வேண்டும் என்று புலவர் பாராட்டுகின்றார். தமிழ் மக்கள் வீரத்தையும் மானத்தையும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள். இய்றகை மரணம் எய்துவதைவிட, வீரமரணம் எய்துவதை பெருமையாகக் கொண்டனர்.

**முடிவுரை:**

இலக்கியங்கள் மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு, இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்குகின்றன. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பாடல் வழி அக்கால மக்கள் வீரமும் விவேகமும் நிறைந்தவர்களாக விளங்கினர். நாட்டில் ஒற்றுமை நிலவும், போரும் இன்றி பகையும் இன்றி மக்கள் ஒற்றுமையுடன் வாழவும் அரும்பாடுபட்டுள்ளனர். போர் புரிய உடல் வலிமையும், மன வலிமையும், கூர்மையான புத்தியும் அவசியமாகச் சங்க காலத்தில் கருதப்பட்டது. போர் இலக்கியமாகக் கருதப்படும் புறநானூறு சமுதாய நல்லிணக்கத்திற்கு அறநெறி அவசியம் என்று கூறுகின்றது. எனவே போர் புரிவதற்கென்றே உள்ள பல நெறிமுறைகளைப் பார்க்கும்பொழுது போரிலக்கியம் என்று தனியே ஒரு பாகுபாடு; இருந்துள்ளது என்பது புலனாகிறது. பலவர்கள் கூட வீரமிக்க எழுச்சி உடையவராக இருந்தமையை இவ்வாய்வு மூலம் நாம் அறிந்தவையாகும். புறநானூறு கூறும் போரிலக்கியச் சிந்தனைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக நாம் அறியலாயினோம்.

**ஆய்வுக்களங்கள்**:

சங்க இலக்கியமும் பண்டையத் தமிழரும் – தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்– மாசறு பதிப்பகம் - திருவல்லிக்கேணி – 600005

தமிழர் வரலாறு தமிழாக்கமும் திறனாய்வும் – பி.டி.சீனிவாச அய்யங்கார் -ராமையா பதிப்பகம் - சென்னை – 600 014.

தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம் - முனைவர் தேவிரா (இராசேந்திரன்)- ஸ்ரீ நந்தினிப் பதிப்பகம் - சென்னை – 600 101

புறநானூறு மூலமும் உரையும் - இரா.குமார் - நல்நிலம் பதிப்பகம் - சென்னை – 17

வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர்.பாக்யமேரி – பூவேந்தன் பதிப்பகம் - சென்னை – 600 004.